வாடகை கட்டுப்பாட்டாளர் தீர்ப்பாயம், திருமங்கலம்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
வாடகை கட்டுப்பாட்டாளர்
(முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்)

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் நாள், புதன்கிழமை
RLTOP No.11/2022
CNR No.TNMD130003392022
-----

மதுரை, திருநகர், 3வது குறுக்குத்தெரு, ஜோசப் நகர், கதவு எண்.1ல் இருக்கும் லேட்.வெங்கடேஸ்வரன் குமாரத்தி இந்து வயது சுமார் 73 உள்ள செல்வி அலமேலு.

... மனுதாரர் / நில உரிமையாளர்

/எதிர்/

மதுரை, திருநகர், 3வது குறுக்குத்தெரு, ஜோசப் நகர், கதவு எண்.1, முதல்தளம் (மாடி) என்ற விலாசத்தில் வசித்து வரும் லேட்.எஸ்.எம்.பவுன்ராஜ் என்பவரின் மகன் வேல்ராஜா.

... எதிர்மனுதாரர்/ வாடகைதாரர்

மனுச்சொத்திலிருந்து எதிர்மனுதாரர்/வாடகைதாரரை சுவாதீனத்திலிருந்து வெளியேற்றி காலி சுவாதீனத்தை மனுதாரர்/நிலச்சுவான்தாரர் வசம் நீதிமன்ற நிர்ணம் செய்யும் கால அவகாசத்திற்குள் எதிர்மனுதாரர்/வாடகைதாரர் காலி சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிட கோரியும், மனுச்சொத்திற்கு

எதிர்மனுதாரர்/வாடகைதாரர், மனுதாரர்/நிலச்சுவான்தாரருக்கு செலுத்த வேண்டிய வாடகை பாக்கி தொகை ரூ.80,200/-(ரூபாய் எண்பதாயிரத்து இருநூறு மட்டும்) செலுத்த உத்தரவிட கோரியும் இந்த மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | : | ரூ.1872/- |
| மனு தாக்கலான நாள் | : | 11.11.2022. |

இந்த மனுவானது கடந்த 24.03.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராஜேந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரருக்கு எதிர்மனுதாரரே ஆஜராகி, இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், மனு, எழுத்துப்பூர்வ வாதுரை, எதிருரை, மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்பாணை

1. **முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் மனுச்சொத்தை காலி செய்து மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டுமென்றும், மேலும், மனுதாரருக்கு எதிர்மனுதாரர் கடந்த ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2026 வரை மாதம் ரூ.3000 வீதம் 48 மாதத்திற்கு ரூ.1,44,000த்தில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்திய

முன்பணம் ரூ.30,000/− போக ரூ.1,14,000/−த்தை மனுதாரருக்கு எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும் என்றும் உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.

2. செலவு தொகை இல்லை. (இருதரப்பிலும் செலவு தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.)

<u>சொத்து விபரம்</u>

மதுரை தெற்கு டி, திருப்பரங்குன்றம் சப்டி, மதுரை தெற்கு தாலுகா, திருப்பரங்குன்றம் கிராம சேகரம், திருநகர் பேரூராட்சி தற்போது மதுரை மாநகராட்சி(வார்டு எண்.98) ஜோசப் நகர் 3வது குறுக்குத்தெரு, கதவு எண்.1, புதிய கதவு எண்.1 – 1/1 ல் உள்ள ஆர்சிசி மொத்த மனைவீட்டில் முதல் மாடி ஆர்சிசி மனைவீடு மட்டும் இதற்கு நான்குமால்,

பழைய சர்வே எண். 90/1B, ரீசர்வே எண்.90/1B2.

வடக்கே – 20 அடி அகல கிழமேல் பொது ரோடு

தெற்கே – செந்தில்மோகன் என்பவரது ஆர்சிசி கட்டிடம்

கிழக்கே – காதர்பீவி மற்றும் மாயன் என்பவரது ஆர்சிசி கட்டிடம் மற்றும் குவைதா காலிமனையிடம்

மேற்கே – ராமகிருஷ்ணன் காலிமனையிடம்

இதற்குட்பட்டது. மேற்படி வீட்டிலுள்ள ரூம்கள், நிலை, கதவு, ஜன்னல், அலமாரி, கக்கூஸ், பாத்ரூம், மின்விசிறி, போர்வெல், மோட்டார் உட்பட மேற்படி வீட்டில் உள்ள சமஸ்தமும் சேர்ந்தது. (மேற்படி சொத்து முன்னாள் ஜோசப் நகர் 1வது தெரு என்று குறிப்பிடப்பட்டிருந்தது)

மேற்படி சொத்து மதுரை மாநகராட்சிக்குட்பட்டது.

**செலவு தொகை பட்டியல்**

(இருதரப்பிலும் செலவு தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.)

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டும் இந்நீதிமன்ற முத்திரையிடப்பட்டும் வழங்கப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.01 17:22:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

R.L.T.O.P. No.11/2022
Ex-order
Date : 01.04.2026